மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மாலை நேரக் கல்லூரியிலே படிக்க வேண்டும் என்ற கருத்தை அரசு ஏற்றுக் கொண்டுதான் அரசின் சார்பாக கல்லூரி இயக்குநர் அந்த வழக்கறிஞர்கள் சங்கத்திற்கு எழுதி இருக்கிறார். அவர்கள் அனுமதி தந்தவுடன் நாம் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க முடியும்.

தமிழ்நாட்டில் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை நிறுவும் திட்டம்

*வினா எண் 229 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உற்பத்தியாளர் கூட்டுறவு ஸ்தாபனங்களை நிறுவுவது பற்றிய திட்டம் தமிழக அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ): தற்பொழுது செயல்பட்டு வரும் ஆதாரக் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களே, இவற்றின் பெயரை ''விவசாய உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள்'' என மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, பரிசீலனை நீண்ட காலமாக நீடித்துக்கொண்டிருக்கின்றது, எனவே சீக்கிரமாக முடிவு எடுத்து அதை அமல் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, இந்தப் பரிசிலனை நீண்ட நாட்களாக இல்லை. சென்ற செலக்ட் கமிட்டியின் கூட்டத்தில்தான் இதுபற்றி யோசனை செய்யப்பட்டு தற்போது 20 நாட்களுக்கு முன்புதான் இதுபற்றிய முடிவான நிலைக்கு வந்திருக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத நிலைமை இருப்பதாகக் கருதக் கூடாது. பெயர் மாற்றம்தான் செய்யப்படுகிறது. Cooperative marketing Societies are only producers Cooperative societies ஏற்கெனவே அந்த விதியில்தான் அவை செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அப்படி 115 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. பெயர்தான் விற்பனைச் சங்கங்கள் என்று இருக்கின்றதே தவிர, செயல், ஆப்ஜெக்ட்ஸ் ஆகிய அனைத்திலும் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களாகத்தான் இருக்கின்றன. இப்படி 115 கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருக்கின்றன.

1982 பிப்ரவரி 17]

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, விவசாய உற்பத்தியாளர்கள் சங்கம் என்ற பெயர் மாற்றத்திற்காக மகிழ்ச்சிதான். ஆனால் தற்போது இடைத்தரகர்கள் மூலம் நெல் விற்பனையிலே இருக்கின்ற லெவியினை முதலாளிகளிட மிருந்து பெறாமல் விவசாயிகளிடத்திலே இருந்து பெறுகின்ற நிலைமை இருக்கின்றது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். விவசாய உற்பத்தியாளர் சங்கம் என்று ஏற்படுகின்றபோது இப்படிப்பட்ட முறைகள் எல்லாம் இல்லாமல் விவசாயிகளுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய விலை நேரடியாகக் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல யோசனை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது, ஆனால் விவசாயிகளிடம் லெவி வாங்குகிறார்கள் என்று நான் கருத வில்லை, வியாபாரிகளிடம்தான் லெவி வாங்குகிறார்கள். ஆனால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் அதனுடைய அங்கத் தினர்களான விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்து அவர்களே அதை நுகர்பொருள் கூட்டுறவு அங்காடிகள் மூலமாக விற்பனை செய்கிறபோது கண்டிப்பாக விவசாயி களுக்கு அதிகப்படியான லாபம் கிடைக்கின்றது. ஒரு சப்போர்ட் ப்ரைஸ் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டு விற்பனையிலே அதிகப் படியான லாபம் கிடைக்குமேயானால் அந்த லாபம் கூட ரிபேட்டாக மீண்டும் விவசாயிகளுக்குச் சென்று சேர வேண்டும் என்று கூட அரசு தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படும் முத்திரைத் தாள்கள்

*வினா எண். 230 திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா?

(அ) தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படும் முத்திரை கட்டணத்தாளில் (Court fee stamp) ஆங்கிலமும், இந்தியும் இருக்கிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) அதில் தமிழ்மொழி இடம்பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) மற்ற மாநிலங்களில் தாய்மொழி இடம் பெற்றிருப் பதை அரசு உணருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.